# உமறுப்புலவர் தமிழ்மொழி நிலையம்
UMAR PULAVAR TAMIL LANGUAGE CENTRE

# பயணம்

மாணவர் இதழ்

**மே 2016**


**தொடர்புக்கு:**

✍ 2, பீட்டி சாலை,
சிங்கப்பூர் 209954

✆ 62980781

**இணையப் பக்கம்:**
www.uptlc.moe.edu.sg


புதிது மாணவர் கையேடு

## உள்ளே...


| உள்ளே... | பக்கம் |
|---|---|
| மேதினம் | 1 |
| வாழ்த்தும் பாராட்டும் | 1 |
| அழகுதமிழ் அறிவோம்! | 1 |
| மாதிரிக் கட்டுரைகள் | 2&3 |
| மாணவர் படைப்புகள் | 2&3 |
| படித்ததில் பிடித்தது | 2 |
| ஓவியக்கலை | 2 |
| நகைச்சுவைத்துணுக்கு | 2 |


## முக்கிய நிகழ்வுகள்:

- **பெற்றோர் ஆசிரியர் சந்திப்பு**
  *மே 12 - 19*
- **ஆழ்நிலைக் கற்றல் வகுப்பு**
  *மே 16 - 20*
- **நூலக வாரம்**
  *மே 16 - 20*
- **GCE O Level தமிழ் – பி தேர்வுகள்**
  *மே 30 - 31*

## மேதினம்

மே தினம் என்பது எட்டு மணி நேர வேலையை உறுதி செய்ய உலகமெங்கும் ஏற்பட்ட தொழிலாளர்களின் உன்னதப் புரட்சியினால் ஏற்பட்டது.




1989ஆம் ஆண்டு ஜூலை 14-ஆம் நாள் பாரீசில் 'சர்வதேசப் பாராளுமன்றம்' கூடியது. இதில் 18 நாடுகளைச் சேர்ந்த பிரதிநிதிகள் பங்கேற்றனர். இக்கூட்டம் கார்ல் மார்க்ஸ் வலியுறுத்திய எட்டு மணி நேரப் போராட்டத்தை முன்னிருத்துவதை முதன்மை நோக்கமாகக் கொண்டு நடைபெற்றது. மேலும், அனைத்துலக அளவில் தொழிலாளர் இயக்கங்களை நடத்திட வேண்டும் என்றும் அறைகூவல் 1890ஆம் ஆண்டு மே மாதம் ஒன்றாம் தேதி விடுக்கப்பட்டது. இந்த நாளே மேதினமாக இன்றுவரை கொண்டாடப்பட்டு வருகின்றது.

*இப்படிக்கு...*
இதழ்க் குழு

## வாழ்த்தும் பாராட்டும்

**'தமிழ்க் குறுஞ்செயலி உருவாக்கம்'**

பார்ட்லி உயர்நிலைப் பள்ளி, வளர்தமிழ் இயக்கம், தமிழ்மொழி கற்றல் வளர்ச்சிக் குழுவின் ஆதரவுடன் 'தமிழ்க் குறுஞ்செயலி உருவாக்கம்' என்னும் போட்டிக்கான பரிசளிப்பு விழா ஏப்ரல் 23ஆம் தேதி நடைபெற்றது. இப்போட்டியில் முப்பதுக்கும் மேற்பட்ட பள்ளிகளைச் சேர்ந்த மாணவர்கள் கலந்துகொண்டனர்.

இவ்விழாவிற்குக் கல்வி அமைச்சு, பாடத்திட்ட வரைவு மற்றும் மேம்பாட்டுப் பிரிவின் தாய்மொழித் துறையின் துணை இயக்குநர் திருவாட்டி சாந்தி செல்லப்பன் தலைமை தாங்கி மாணவர்களுக்குப் பரிசுகள் வழங்கிப் பாராட்டினார்.

இப்போட்டியில் சிறந்த பத்துக் குறுஞ்செயலிகளுக்குப் பரிசுகள் வழங்கப்பட்டன. முதல் பரிசாக $1,500, இரண்டாம் பரிசாக $1,000, மூன்றாம் பரிசாக $500 மற்றும் ஏழு ஆறுதல் பரிசுகளாகத் தலா $100 வெள்ளியும் பரிசுத்தொகைகள் வழங்கப்பட்டன. உமறுப்புலவர் தமிழ்மொழி நிலைய மாணவர்களான அம்ரிஷ், ராஜ்குமார் (3HT) இருவரும் இப்போட்டியில் பங்கேற்று நான்காம் பரிசைத் தட்டிச் சென்றனர். வெற்றி பெற்ற மாணவர்களுக்கு வாழ்த்தும் பாராட்டும்!



**'இணையத்தில் சிங்கைத் தமிழ் இலக்கியங்கள் – ஓர் ஆய்வு'**

அண்ணாமலைப் பல்கலைக்கழக முன்னாள் மாணவர்கள் சங்கம் நடத்திய இணையத்தில் சிங்கைத் தமிழ் இலக்கியங்கள் - ஓர் ஆய்வு என்னும் தலைப்பில் நடைபெற்ற ஆய்வுப் படைப்புக்கான போட்டியில் நிலைய மாணவர் செல்வன் அகிலேஷ் (4HT) பங்கேற்று இரண்டாம் பரிசினை வென்றார். அவருக்கும் நமது வாழ்த்தும் பாராட்டும்!




## படிப்பது எப்படி?

- பரிசோதனைத் தேர்வு எழுதிப் பார்க்க வேண்டும்
- விடைத்தாளில் பெயர், பதிவு எண் போன்றவற்றைச் சரியாக எழுத வேண்டும்
- அவற்றைச் சரிபார்த்துக் கொள்வதும் அவசியம்

தொடரும்...

## அழகுதமிழ் அறிவோம்!

| | |
|---|---|
| ESCALATOR | மின்படிக்கட்டு |
| CRANE | பாரந்தூக்கி |

மாணவர்களின் படைப்புகள் வரவேற்கப்படுகின்றன!

**பயணம் இதழை நடத்துவதற்குப் பொறுப்பாளர்கள் தேவை.**

## மாதிரிக் கட்டுரை

**உன் நெருங்கிய நண்பனைப் பற்றியும் அவனிடம் காணப்படும் நற்பண்புகள் பற்றியும் விளக்குக.**

நண்பர்கள் நம் வாழ்க்கையில் மிகவும் முக்கியமானவர்கள். அவர்கள் நம்முடன் நெருக்கமாகப் பழகுவதால் நமது உணர்வுகளை அவர்களுடன் பகிர்ந்துகொள்ள முடிகிறது. அதனால்தான் நம் எல்லோருக்கும் நண்பர்கள் இருக்கிறார்கள். நட்பின் முக்கியத்துவத்தை உணர்ந்த திருவள்ளுவரும் 'நட்பு' என்ற ஓர் அதிகாரத்தையே எழுதியுள்ளார். எனக்கும் ஒரு நெருங்கிய நண்பன் இருக்கிறான். அவனைப் பற்றியும் அவனிடம் காணப்படும் நற்பண்புகள் பற்றியும் இந்தக் கட்டுரையில் எழுதப் போகிறேன்.

என் நண்பனின் பெயர் ரகு. அவன் உயர்நிலை ஒன்றாம் வகுப்பில் படிக்கிறான். நானும் அவனும் ஒரே பள்ளியில் ஒரே வகுப்பில் படிக்கிறோம். தொடக்கப் பள்ளி முதல் நாங்கள் இருவரும் **நகமும் சதையும்போலப்** பழகி வருகிறோம். அதனால், என்னைப் பற்றி அவனுக்கும் அவனைப் பற்றி எனக்கும் நன்றாகத் தெரியும்.

என் நண்பன் ரகு மிகவும் நல்லவன். அவன் எல்லாரிடமும் அன்பாகப் பழகுவான். இனிமையான சொற்களைப் பேசுவான். ஆசிரியர்களிடம் மிகவும் மரியாதையாக நடந்துகொள்வான். அவன் எப்போதும் உண்மையே பேசுவான்; நேர்மையாகவும் நடந்துகொள்வான். அவன் மிகவும் பொறுமைசாலி. அவன் நண்பர்களைப் புரிந்துகொண்டு நடப்பான். அதனால் அவனை அனைவருக்கும் பிடிக்கும்.

ரகு எல்லோருக்கும் உதவி செய்வான். துன்பம் வரும்போது ஓடிவந்து உதவிக்கரம் நீட்டுவான். வீட்டில் பெற்றோருக்கும், பள்ளியில் தன்னுடன் படிக்கும் நண்பர்களுக்கும் ஆசிரியர்களுக்கும் வெளியிடங்களில் முதியவர்களுக்கும் நன்கு உதவி செய்வான். எனக்கும் பாடங்களில் உதவி செய்வான். **'அன்பான நண்பனை ஆபத்தில் அறியலாம்'** என்பதற்கு அவன் ஒரு நல்ல முன்மாதிரியாக விளங்குகின்றான். மேலும், இரகசியத்தைப் பாதுகாப்பான். அவனிடம் தீய பழக்கங்கள் எதுவும் இல்லை. ஒழுக்கத்திலும் அவன் சிறந்து விளங்குகின்றான்.

எனது நண்பன் ரகு நற்பண்புகள் நிறைந்தவன். அவன் குணத்தில் மட்டுமல்லாமல், படிப்பிலும் விளையாட்டிலும் கெட்டிக்காரன். அவன் எனக்கு நண்பனாகக் கிடைத்ததை நினைத்து நான் பெருமைப்படுகின்றேன். அவனிடம் இருக்கும் குணங்களைப் பின்பற்றி நானும் நடந்துகொள்கின்றேன். ஆகவே, அவன் எனக்கு ஒரு வழிகாட்டியாகவும் திகழ்கிறான். இப்படிப்பட்ட நண்பர்களே நம் வாழ்க்கைக்குத் தேவை. அப்போதுதான் நம் வாழ்க்கையும் ஒளிமயமாகத் திகழும்.

## ஓவியக் கலை

*எனக்கு மிகவும் பிடித்த ஒரு கலை ஓவியக்கலை ஆகும். ஓவியக்கலை என்றால் எனக்குக் கொள்ளை ஆசை. ஓவியம் வரைவது நம் மூளையின் சிந்தனைத் திறனை வளர்க்கும். அதுமட்டுமல்ல; அது நமது உடலுக்கும் நல்லது. நம்முடைய கவனத்தை அதிகரித்து, நம் மனத்திற்கு ஆழ்ந்த அமைதியையும் தருகிறது. மேலும், நமக்கு நேர்மறையான எண்ணங்களையும் வழங்குகிறது.*

*எனக்கு மிகவும் பிடித்த ஓவியர், லியாணர்டோ டாவின்சி ஆவார். இவரின் ஓவியங்களைக் கண்டு வியக்காதோர் யாருமில்லை. புகழ்பெற்ற 'மோனலிசா' ஓவியத்தை இவர்தான் வரைந்தார். நான் முதன்முதலில் மோனலிசா ஓவியத்தைப் பார்த்துத்தான் பிரமிப்பு அடைந்தேன். அதன் பிறகு, இவருடைய ஓவியங்களைப் பார்த்து ரசித்து ஓவியக்கலையில் ஆர்வம் காட்டினேன். இன்று என்னால் நல்ல ஓவியங்களை வரைய முடிகிறது. நீங்களும் முயற்சி செய்தால் ஓவியக்கலையைக் கற்றுக்கொள்ளலாம்.*

சுபஸ்ரீ(1Exp)

## வரலாறு படைப்பாய்!



*வலியோடு போராடி*
*ஒரு பெண் தாயாகிறாள்!*
*இருளோடு போராடி*
*புழு வண்ணத்துப்பூச்சி ஆகிறது!*
*வாழ்க்கையோடு போராடு - நீ*
*வரலாறு படைப்பாய்!*




## செவிகளுக்கு எட்டவில்லை! (கதை)

பெரும் படையே என்னைச் சூழ்ந்திருந்தது. நெற்றி சுருங்கி, சொட்டுச் சொட்டாக வியர்வை முத்துகள் வழிய... நான் கைகளில் இருந்த ரகசிய ஆயுதத்தை மிகவும் கெட்டியாகப் பிடித்துக்கொண்டு காத்துக் கொண்டிருந்தேன்.

என் பின்னால் அழுகைச் சத்தம் வேறு... ஆயினும் மனத்தைக் கல்லாக்கிக்கொண்டு நின்றேன். நெஞ்சில் ஒருவிதத் துடிப்பு! எப்படியும் இலக்கை எட்டிவிட வேண்டும் என்ற தீவிரம்! இடையே எனது ஆசைக்கும் கஷ்டத்திற்கும் நல்ல தீர்வு கிடைத்துவிட வேண்டும் என்று எண்ணியவாறு நின்றுகொண்டிருந்தேன்.

நான் என்னையே மறந்தேன். சுற்றி நடப்பது எதையும் நான் கவனிக்கவில்லை. இலட்சியத்தை அடைவது மட்டுமே எனது நோக்கமாக இருந்தது. எப்படியும் வெற்றிபெற வேண்டும் என்ற இலட்சியத்தோடு ஒவ்வொரு அடியையும் எடுத்து வைக்கத் தொடங்கினேன்.

கண்ணெதிரே மஞ்சள் நிறக்கோடு இருந்தது. அதற்கு அருகாமையில் பெரிதாக ஒன்று வந்து நின்றது. எல்லோரும் முண்டியடித்துக்கொண்டு உள்ளே சென்றார்கள். நானும் அவர்களைப் போலவே... கைக்குழந்தையைத் தூக்கிக்கொண்டு நிற்கும் பெண்மணி, தள்ளாடி நிற்கும் முதியவர் என்று பலரைப் பின்தள்ளிவிட்டு அவசர அவசரமாக உள்ளே சென்றேன்.

ஒருவழியாக எனது இலட்சியம் நிறைவேறியது! மனத்தில் ஒருவித மகிழ்ச்சி! ஆனால்... பல கண்கள் என்னைப் பார்த்துக் கேலி செய்வது போன்று இருந்தது. ஆனாலும், எந்தக் கண்களும் என்னைப் பார்க்கவில்லை. இருப்பினும்... எனக்கு என்னவோ போலிருந்தது. அந்த இருக்கையில் அமர்ந்திருக்க என்னால் முடியவில்லை. எழுந்தேன்!

ஒரு சிறுமி ஓடிவந்து அந்த இருக்கையில் அமர்ந்துகொண்டு, என்னிடம் 'நன்றி' என்று சிரித்துக்கொண்டே கூறினாள். ஆனாலும், அந்த வார்த்தை என் செவிகளுக்கு எட்டவில்லை. கன்னத்தில் அறை விழுந்ததுபோல் இருந்தது. என் தலை என்னை அறியாமல் கவிழ்ந்தது!

அர்ஃபா, 3HT1



**நாம்**

பெருவிரைவு இரயிலில்
குனிந்த தலை நிமிராமல்
அலைபேசிகளுடன் அனைவரும்
மனித இயந்திரங்களாக
சங்கமித்துவிட்டார்களேயென்று
அலுத்துக்கொண்ட என்னை...
மின்னூட்டத்தை
முற்றிலுமாக இழக்கவிருந்த
கைபேசி பார்த்துச் சிரித்தது.



அஸ்வினி,NETP

**படித்ததில் பிடித்தது!**

**அழகு தமிழ்**



**தடுக்கி விழுந்தால் - அ... ஆ**
**சிரிக்கும் போது - இ... ஈ**
**சூடு போக்க - உ... ஊ**
**அதட்டும் போது - எ... ஏ**
**ஆச்சரியத்தின் போது - ஐ...**
**வக்கணையின் போது - ஒ...**
**விக்கல் வந்தால் - ஃ**

**மகன்:** அம்மா! நான் தேர்வில் நூற்றுக்கு நூறு மதிப்பெண் வாங்கினால் என்ன செய்வீங்க!

**அம்மா:** அப்படி நடந்தால்... நான் மயக்கம் போட்டு விழுந்துவிடுவேன்!

**மகன்:** அம்மா! நீங்க மயக்கம்போட்டு விழக்கூடாது என்பதற்காகத்தான், நான் நூற்றுக்கு ஐம்பது மதிப்பெண் வாங்கியிருக்கிறேன்.



திவ்யேஷ், துளசி(1Exp)

# மாதிரிக் கட்டுரை

## ஆத்திரத்தில் அறிவிழந்த ஒரு சம்பவம்

கணித ஆசிரியர் தேர்வுத்தாள்களை எங்களிடம் கொடுத்துக்கொண்டிருந்தார். என் பெயரை அவர் கூப்பிட்டதும் நான் எழுந்து நின்று என் தேர்வுத்தாளை வாங்கச் சென்றேன். என்னுடைய தாள் கிடைத்ததும் உடனே என் மதிப்பெண்களைப் பார்த்தேன். நான் தேர்வில் வெறும் அறுபது மதிப்பெண்களே வாங்கியிருந்தேன். அதைப் பார்த்ததும் என் இதயமே சுக்குநூறாக உடைந்ததுபோல ஓர் உணர்வு ஏற்பட்டது. பூமியே இரண்டாகப் பிளந்ததுபோல் இருந்தது.

நான் தேர்வில் 'ஏ' வாங்கும் குறிக்கோளுடன் கடுமையாகப் படித்தேன். நிச்சயம் கிடைக்கும் என்று திண்ணமாக நம்பியிருந்தேன். ஆனால் 'பி' தான் கிடைத்தது. இன்னும் ஒரு மதிப்பெண் குறைந்திருந்தாலும் நிலைமை இன்னும் மோசமாகியிருக்கும். நான் என் பெற்றோரை நினைத்து அஞ்சினேன். தேர்வில் 'ஏ' எடுப்பேன் என்று பெருமையாகக் கூறிக்கொண்டிருந்தேன். இப்போது அறுபது மதிப்பெண்கள்தான் கிடைத்திருக்கிறது என்று என் அப்பாவுக்குத் தெரிந்தால் அடித்துவிடுவார்.

கண்களிலிருந்து கண்ணீர் தாரை தாரையாக வழிந்தது. எனக்கு மிகவும் அவமானமாக இருந்தது. நான் யாரையும் பார்க்காமல் அமைதியாக உட்கார்ந்திருந்தேன். எனக்கு யாருடனும் பேசப் பிடிக்கவில்லை. அப்போது, என் தோழி சாரா, "ஏ! திவ்யா உனக்கு எவ்வளவு மதிப்பெண்கள் கிடைத்தன?" என்று வினவினாள்.

சொல்லமாட்டேன், என்று ஒரே சொல்லில் பதில் அளித்து என் தாளைத் திருப்பி வைத்துவிட்டேன். பின்பக்கம் தெரியும்படி வைத்தால் யாரும் என் மதிப்பெண்களைப் பார்க்க முடியாது என்று அப்படிச் செய்தேன்.

"சும்மா சொல்லு, வேண்டுமென்றால் என் மதிப்பெண்களை உன்னிடம் சொல்கிறேன். நான் வெறும் எண்பத்து ஏழு மதிப்பெண்கள்தான் பெற்றிருக்கிறேன், நீ?" என்று மீண்டும் சாரா கேட்டாள்.

"சொல்லமாட்டேன்", என்று சற்று எரிச்சலுடனும் கோபத்துடனும் கூறினேன். எண்பத்து ஏழு மதிப்பெண்களே குறைவு என்று சாரா நினைத்தாள். அப்போது என் மதிப்பெண்களைத் தெரிந்துகொண்டால் என்னைக் கேலி செய்வாள் என்று நினைத்தேன். அதை நினைக்கும்போது எனக்குக் கோபங்கோபமாக வந்தது.

"திவ்யா, நான் யாரிடமும் உன் ... " என்று சாரா கூற, நான் யோசிக்காமல், "சாரா! நீ புத்திசாலிதான். நான் ஒப்புக்கொள்கிறேன். ஆனால் நான் புத்திசாலியல்ல. எண்பத்து ஏழு மதிப்பெண்களே குறைவு என்று நினைக்கிறாய். ஆனால், அது எனக்கு அதிகம். இதற்கு மேல் உன்னிடம் பேச எனக்கு ஒன்றுமில்லை." என்று அவளிடம் கோபமாகப் பொரிந்து தள்ளினேன்.

சூரியனைக் கண்ட தாமரையைப்போல் மலர்ந்த முகமாக இருந்த அவள் உடனே வாடிப்போனாள். அதைக் கண்டதும் என்னிடம் இருந்த கோபம் பாதியாகக் குறைந்தது.

வகுப்பு முழுவதும் சாரா என்னிடம் எதுவும் கேட்கவில்லை. நான் மிகவும் வருந்தினேன். சாரா எந்தத் தப்பும் செய்யாதபோது நான் அவளைத் திட்டிவிட்டேன். பள்ளி முடிந்த பின் நான் அவளிடம் மன்னிப்புக் கேட்க முயன்றேன். ஆனால், அவள் என்னைக் கண்டுகொள்ளாமல் போய்விட்டாள்.

வீட்டிற்குப் போன பிறகு, நான் நடந்ததைப்பற்றி சிந்தித்துப் பார்த்தேன். சாரா என்ன செய்துவிட்டாள்? நான் ஏன் அவளைத் திட்டினேன். சாரா ஏன் பிறகு என்னிடம் பேசவில்லை? என்று பல கேள்விகள் என் உள்ளத்தில் எழுந்தன. அடுத்த நாள் அவளிடம் மன்னிப்புக் கேட்க முடிவு செய்தேன்.

அடுத்த நாள், நான் பள்ளிக்கு வந்ததும் முதல் வேலையாகச் சாராவைத் தேடினேன். அவளைப் பார்த்து அவளிடம் நான் மன்னிப்புக் கேட்டேன். அவள், "பரவாயில்லை" என்றாள்.

அன்று **'ஆத்திரக்காரனுக்குப் புத்தி மட்டு'** என்ற பழமொழியின் பொருளை நன்கு அறிந்துகொண்டேன். அன்று நடந்த சம்பவம் இன்றும் என் மனத்தில் பசுமரத்தாணிபோல் பதிந்துள்ளது.

மதிவாணன் திவ்யா (1HT2)

# ஆதங்கம் (கதை)

இருப்புச்சட்டியைக் கரிபோகத் தேய்ச்சுக் கழுவும்போது எனக்குத் தோன்றியது, 'இப்பிடித்தானே நம்ப மனசும், சுத்தமா வச்சுக்காட்டி அதுவும் கரிப்புடிச்சு போயிருமேனு'.

என்னுடைய மனத்தில் இருந்த கறையை என்னால் அகற்றமுடியாவிடிலும் என்னுடைய பெற்றோர்கள் அகற்றியிருக்கலாம். மாறாக, அறிந்தோ அறியாமலோ அவர்கள் அதைப் பெரிதாக்கினார்கள். இறுதியில், அக்கறை, என்னுள் அகற்றமுடியாத குற்றவுணர்ச்சியாக **விஸ்வரூபமெடுத்து** என்னுடைய மனத்தை வாழ்நாள் முழுவதும் உறுத்திக்கொண்டே இருக்கின்றது.

'உனது அண்ணனைப் பார்? அவன்...' என்ற பேச்சை எவர் எடுத்தாலும் சரி, அன்றைய நாள் முழுவதும் முகத்தைச் சுளித்த வண்ணம் இருப்பேன். என் அண்ணன் இல்லாமல் இருந்திருந்தால் நான் நிம்மதியாகவும் மகிழ்ச்சியாகவும் இருந்திருக்கலாம் என்று எண்ணியதும் உண்டு.

அவன் என்னைவிட மூத்தவனாக இருந்ததோடு நில்லாமல் கல்வி, விளையாட்டு என்று அனைத்திலும் சிறந்து விளங்கினான். அவன் பயின்றதோ ரா∴பில்ஸ் கல்வி நிலையத்தில், நான் படித்ததோ தோம்சன் உயர்நிலைப் பள்ளியில்... அவன் மனித உறுப்புகளைப் பற்றிய அறிவியல் பாடத்தை விரும்பினான். நான் மனித மனங்களை ஆராயும் வரலாற்றுப் பாடத்தை விரும்பினேன். உயிர்களைக் காப்பாற்றும் மருத்துவராக வேண்டியது அவனுடைய கனவு, உயிரையும் தாண்டி மனத்தோடு இணையும் இசையில் சாதனை புரியவேண்டும் என்பது என்னுடைய இலட்சியம்.

இதில் எது சரி, எது தவறென்று **வரையறை** ஏதுமில்லை. நாங்கள் இருவரும் **இருவேறு துருவங்கள்!** அவ்வளவுதான். ஆனால், இசைத்துறையில் சாதிக்கும் எனது வேட்கை அனைவருக்கும் வேடிக்கையாகவே இருந்தது. என்னை மற்றவர்கள் தாம் புரிந்துகொள்ளவில்லையென்றால் என்னைப் பெற்றவர்களும் புரிந்துகொள்ளவில்லை.

'இசை உனக்கு சோறு போடாது. உன் அண்ணனைப் பார்! மருத்துவராகப் போகிறான்! நீயேன் ஒரு வழக்கறிஞராகக் கூடாது?' என்று அவர்கள் கேட்கும்போதெல்லாம் என்னுள் பொங்கி எழும் சினம் விழிகளில் நீராய் வழிந்தோடும்.

காலவோட்டத்தில் அனைவருமே ஒரே மாதிரியாக இருக்கமாட்டார்கள் என்ற உண்மையை என்னைச் சுற்றியிருப்பவர்கள் ஏற்றுக்கொள்ளாவிடிலும் நான் அதை ஏற்றுக்கொண்டேன்; என் அண்ணனையும் ஏற்றுக்கொண்டேன். சில ஆண்டுகளில் அண்ணனும் உயர்கல்வியை அயல்நாட்டில் தொடர்ந்தான்; நானோ எனது **இசைப்பயணத்தை** சிங்கப்பூரில் தொடர்ந்தேன். இருப்பினும், என்றாவது ஒருநாள் என் அண்ணனிடம் அவனை வெறுத்ததற்கும் அவன் மீது பொறாமை கொண்டதற்கும் **மன்னிப்புக்கோர** வேண்டும் என்ற எண்ணம் என் அடிமனத்தில் இருந்துகொண்டேதான் இருந்தது.

ஓர் ஆண்டிறுதி விடுமுறையின்போது, அண்ணனுடன் லண்டனில் இரண்டு வாரங்கள் தங்கிவிட்டுச் சிங்கப்பூர் திரும்புவதாக நானும் என்னுடைய பெற்றோரும் திட்டமிட்டிருந்தோம். அண்ணனுடன் தங்கும்பொழுது அவனிடம் தனிமையில் பேசி என்னுடைய **மனக்குமுறல்களை** அவனிடம் கொட்டி மன்னிப்பு வேண்டலாம் என்ற எனது எண்ணத்தைச் சுக்குநூறாக உடைக்கும் வண்ணம் அவன் பயிலும் பல்கலைக்கழகத்திலிருந்து ஒரு நாள் தொலைபேசியின் வாயிலாக அவசர அழைப்பு வந்தது.

அண்ணனைக் காண அங்குச் சென்ற எங்களிடம் மருத்துவர், 'அரவிந்தன் சிக்கிக்கொண்ட விபத்தில் உயிர்பிழைத்தாலும், அவருக்குப் பழைய நினைவுகள் ஏதுமிருக்காது,' என்று கூறினார். என் மனத்தில் இருந்த கறையைக் காலம் முழுவதும் சுமக்க என் மனம் அனுமதிக்கவில்லை. விரைவில் என் அண்ணன் குணமடைய இறைவனை வேண்டிக்கொண்டு கனத்த மனத்துடன் அங்கிருந்து கண்ணீருடன் அகன்றேன்.

அஸ்வினி,NETP